**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 4 |
| நாள் | : | 29.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ்பாபு | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | தேவேந்திரன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 2, 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தாபுதுபேட்டையில் வசித்து வருகிறேன். ஆவடி பணிமனையில் அரசு போக்குவரத்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். LPF தொழிற்சங்கத்தில் Representative ஆக உள்ளேன். 21.06.2018 மாலை 5.10 மணி அளவில் எங்கள் பணிமனையில் ஓட்டுநராக பணிபுரியும் ரவிகுமார் என்பவரை யாரோ வழி மடக்கி அடித்து விட்டதாகவும், பேரூந்தின் கண்ணாடியை ஒடைத்துவிட்டதாக கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். காயம் பட்ட ரவிகுமாரை எனது உறவினர் என்ற முறையிலும் என்னுடன் பணியும் நபர் என்ற முறையிலும் அவரை திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சென்று சேர்த்து அவரை யார் அடித்தார்கள் என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.01.29 10:22:44 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 29.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணதாசன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | கபீர்தாஸ் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 2, 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நெமிலிசேரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் காவல் நிலையம் சென்றிருந்த போது போலிசார் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள் அது எதற்கு என்பது எனக்கு தெரியாது. போலிஸ் காவல் நிலையத்தில் வைத்து தான் வாங்கினார்கள். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2 மற்றும் அ.த.சா.ஆ.3 ஆகும்.**

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 22.06.2018 அன்று காலை 5.30 மணிக்கு வீட்டிற்கு வெளியே போலிசார் நின்று கொண்டிருந்தார் என்றும், PTMS Main Road–ல் வேகதடை அருகே உடைந்து சிறதி கிடைந்த கண்ணாடி துகல்களை காட்டினார்கள் என்றும், 21.06.2018 அன்று மாலை 5.00 மணிக்கு S47 பேருந்து ஓட்டினரை அடித்து சேதப்படித்தியதாகவும், அந்த இடத்தினை பார்வையிட்டு மாதிரிவரைப்படம், பார்வை மகஜர் தயார் செய்ய தங்களை சாட்சியாக இருக்க

சொன்னார்கள் என்றும், அதற்கு நானும், துரைராஜனும், சம்மதித்தோம் என்றும், எங்கள் வீட்டில் அருகில் இருந்த சம்பவ இடத்தை மாதிரிவரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றும், அங்கு சிதறி கிடைந்த கண்ணாடி துகல்களை மகஜரில் எங்கள் முன்பு கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.01.29 10:22:49 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 6 |
| நாள் | : | 29.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோகரன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | ரங்கநாதன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 2, 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது தந்தை பெரியாயர் நகர் பட்டாபிராமில் வசித்து வருகிறேன். மேலும் சேக்காடு பகுதியில் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என் கடை அருகே வந்து கையொப்பம் வாங்கினார்கள் அது எதற்கு என்பது கூட தெரியாது. கைபொய்பம் மட்டும் போட்டோம். என்னுடன் கருனாகரன் என்கிற கருனாநிதி த/பெ.நேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். வேறு எதுவும் தெரியாது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.4** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 22.06.2018 அன்று மதியம் 2.00 மணிக்கு நெமிலிசேரி ரவுண்டானா அருகே நடந்து சென்ற போது பட்டாபிராம் போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தார் அப்போது எனக்கு தெரிந்த தண்டுரை கிராமத்தை சேர்ந்த கருணாகரன் என்பவரும இருந்தார் என்றும், உதவி ஆய்வாளர் அந்த நபரை காட்டி நேற்று மிட்டனமல்லி செல்லும் மினி

பேருந்தின் டிரைவரையும், பேருந்தையும் அடித்த வழக்கில் கைது செய்து இருப்பதாகவும், அதில் அவர் கொடுத்த வாக்குமூலத்தில் சாட்சிய இருக்கும் படி கேட்டு கொண்டார் என்றும், நானும், கருணாகரனும் சம்மதம் தெரிவித்தோம் என்றும், அந்த நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த நபர் எஸ்.47 என்ற பேருந்தின் ஓட்டுநரை அடித்ததாகவும், அசிங்கமாக திட்டியதாகவும், தனது நண்பர்களுடன் வந்து பஸ்சை குறுக்கே நிப்பாட்டி பஸ்ஸின் கண்ணாடியை உடைத்ததாகவும், கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் பதிவு செய்து அவரை கைது செய்ததாக கூறியதில் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கருணாகரனும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.01.29 10:22:56 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 7 |
| நாள் | : | 29.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருணாகரன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | நேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 2, 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது தண்டுரை கிராமத்தில் பட்டாபிராமில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என் கடை அருகே வந்து கையொப்பம் வாங்கினார்கள் அது எதற்கு என்பது கூட தெரியாது. கைபொய்பம் மட்டும் போட்டோம். என்னுடன் மனோகரனும் கையொப்பம் செய்தோம். வேறு எதுவும் தெரியாது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.5** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 22.06.2018 அன்று மதியம் 2.00 மணிக்கு நெமிலிசேரி ரவுண்டானா அருகே நடந்து சென்ற போது பட்டாபிராம் போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தார் அப்போது எனக்கு தெரிந்த பெரியார் நகர் பட்டாபிரம் சேர்ந்த மனோகரன் என்பவரும இருந்தார் என்றும், உதவி ஆய்வாளர் அந்த நபரை காட்டி நேற்று மிட்டனமல்லி செல்லும் மினி பேருந்தின் டிரைவரையும், பேருந்தையும் அடித்த வழக்கில் கைது செய்து

இருப்பதாகவும், அதில் அவர் கொடுத்த வாக்குமூலத்தில் சாட்சிய இருக்கும் படி கேட்டு கொண்டார் என்றும், நானும், மனோகரனும் சம்மதம் தெரிவித்தோம் என்றும், அந்த நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த நபர் எஸ்.47 என்ற பேருந்தின் ஓட்டுநரை அடித்ததாகவும், அசிங்கமாக திட்டியதாகவும், தனது நண்பர்களுடன் வந்து பஸ்சை குறுக்கே நிப்பாட்டி பஸ்ஸின் கண்ணாடியை உடைத்ததாகவும், கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் பதிவு செய்து அவரை கைது செய்ததாக கூறியதில் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், மனோகரனும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.01.29 10:23:02 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.